(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 363.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 மே 22, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2224/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக்-ஹிதட செவனக்" வேலைத் திட்டத்தின் கீழ், குருநாகல், அனுராதாபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களில் வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கென்றே 15000 வீடுகளைக் கொண்ட மூன்று புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நகரங்கள் யாவை என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3223/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 சனவரி 01 முதல் இற்றைவரை ஓய்வூதியத்தைப் பெறத் தகுதியுடைய அரசாங்க ஊழியர்கள் தமக்கான சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொண்ட திகதிகளையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதிகரிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இன்றுள்ளவாறு சம்பள ஏற்றத்தைப் பெறுவதற்குத் தகுதியுடைய அரசாங்க ஊழியர் களாக பணியாற்றுபவர்களது மொத்த எண்ணிக்கை என்னவென்பதையும்;

(iii) 2005 சனவரி 01 முதல் இற்றை வரை அதிகரிக்கப்பட்ட படிகள் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்;

(iv) படிகள் அதிகரிப்பு ஏற்படுத்திய மொத்தத் தாக்கம் மற்றும் குறிப்பிடப்பட்ட தாக்கத்தினால் பாதிப்படைந்த அரசாங்க ஊழியர்களது எண்ணிக்கை ஆகியன என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3332/ '12

3.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன,மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 - 2012 காலகட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர்கள் பணியகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைபாடு களின் எண்ணிக்கை வருட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டின் பொலிஸ் அறிக்கைகளின் பிரகாரம் ஒரு நாளில் இடம் பெற்ற சிறுவர் துஷ்பிரயோகங்களின் சராசரி எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2008 - 2012 காலகட்டத்தில்,

(i) சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக அரசியல் தொடர்புள்ள நபர்கள் குற்றவாளிகளாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3592/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹக்மன பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை ஹக்மன பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3913/ '13

5.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமத்திய மாகாணத்தில்,

(i) 2005-2012 காலப் பகுதிக்குள் உயிரிழந்துள்ள மொத்தப் புற்று நோயாளர்களதும்;

(ii) ஒவ்வொரு வைத்தியசாலையிலும் உயிரிழந்துள்ள மேற்படி நோயாளர்களதும்;

(iii) அரசாங்க வைத்தியசாலைகளில் தற்போது சிகிச்சை பெற்றுவருகின்ற மொத்தப் புற்றுநோயாளர்களதும்;

(iv) ஒவ்வொரு அரசாங்க வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுவருகின்ற மேற்படி நோயாளர்களதும்

எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடமத்திய மாகாணத்தில் புற்று நோயாளர்களுக்கு போதியளவு மருந்துகள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி மாகாணத்தில் புற்று நோயாளர்கள் துரிதமாக அதிகரித்துள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி காரணங்களைத் தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4109/ '13

6.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் e-NIC கருத்திட்டத்திற்காக லங்கா லொஜிஸ்ரிக் நிறுவனத்திற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலுத்தப்பட்டுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக 2012.12.31 ஆம் திகதி லங்கா லொஜிஸ்ரிக் நிறுவனம் ரூபா 37,649,044.00 பணத் தொகையை கோரியுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி பணத்தொகை குறித்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) லங்கா லொஜிஸ்ரிக் நிறுவனம் e-NIC கருத்திட்டம் தொடர்பாக வழங்கியுள்ள சேவைகள் மற்றும் மேற்படி ஒவ்வொரு சேவை தொடர்பிலுமான செலவினம் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) e-NIC கருத்திட்டத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் தகுந்த வழங்குனர் ஒருவரை தெரிவு செய்துகொள்வதற்கு உத்தேசமாயுள்ள நிலையில் இடையீட்டு நிறுவனமொன்றுக்கு பெருந்தொகைப் பணம் செலுத்தப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4312/ '13

7\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனம் தனியார்மயப்படுத்தப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) தனியார்மயப்படுத்திய சந்தர்ப்பத்தில் அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டபோது, அப்போதைய கௌரவ நிதி அமைச்சர் கலாநிதி என்.எம். பெரேரா அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சார்பில் பொதுத் திறைசேரியில் வைப்புச் செய்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனம் தனியார்மயப்படுத்தப்பட்ட பின்னர் புதிய நிறுவனத்தில் சேவையாற்ற விரும்பாத ஊழியர்களில் பதவி விலகிய, சேவையிலிருந்து அகற்றப்பட்ட மற்றும் பதவி விட்டு நீங்கிய ஊழியர்களுக்கு ஏதேனும் நட்டஈட்டுத் தொகையை பொதுத் திறைசேரியில் வைப்பிலிடப்பட்ட பணத் தொகையிலிருந்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு ஊழியருக்கும் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4321/ '13

8\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தாதிமார் சேவையில் தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) தாதிமார் சேவையில் காணப்படும் அந்த வெற்றிடங்களை கணிப்பிடுவதற்காக பின்பற்றப்பட்ட அடிப்படை (நோயாளர்கள், நோயாளிகளுக்கான படுக்கைகளின் எண்ணிக்கை அல்லது வேறு காரணிகள் என்றவாறு) யாது;

(iii) தாதிமார் சேவைக்கு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முன்னர் எவ்வளவு காலம் பயிற்சி வழங்கப்படுகிறது

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் உள்ள தாதிமார் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த தாதிமார் கல்லூரிகளில் ஒரு வருடத்தினுள் பயிற்சி வழங்கக்கூடிய தாதிமார்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) அந்த பயிற்சிக் கல்லூரிகளில் கல்விசார் பதவியணியினருக்கான (விரிவுரையாளர்கள்) வெற்றிடங்கள் உள்ளதா;

(iv) ஆமெனில், அந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதா;

(v) அந்த வெற்றிடங்கள் எவ்வாறு நிரப்பப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4410/ '13

9.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் 'தயட்ட கிருல' வேலைத்திட்டத்தின் கீழ் குருணாகல் மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படுகின்ற வீதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒவ்வொரு வீதியினதும் அபிவிருத்திக்கு ஏற்புடையதான கேள்விப்பத்திரங்கள் அளிக்கப்பட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) ஒவ்வொரு வீதி அபிவிருத்தி கருத்திட்டத்துக்கும் அளிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு ஏற்புடையதாக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4445/ '13

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மூப்புரிமை மற்றும் திறமை அடிப்படையில் இலங்கை கணக்காய்வு சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தர கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்கு உயர்த்துவதற்காக 2013 சனவரி மாதத்தில் நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்கு ஏற்புடையதாக்கிக்கொள்ளப்பட்ட பாடங்களின் எண்ணிக்கை, பரீட்சைக்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை மற்றும் அதில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்கள் நேர்முகப் பரீட்சையிலும் எழுத்துமூல பரீட்சையிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் யாதென்பதையும்

அவர் தனித் தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நேர்முகப் பரீட்சையில்,

(i) புள்ளிகள் வழங்கப்பட்ட அளவுகோள் யாதென்பதையும்;

(ii) மூப்புரிமைக்கும் திறமைக்கும் புள்ளிகள் வழங்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iii) அனுபவத்திற்காக புள்ளிகள் வழங்கும் போது கருத்திற்கொள்ளப்பட்ட பொறுப்பு உத்தியோகத்தர் ( Group Officer) பதவியானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி பதவிக்கு புள்ளிகள் வழங்குவதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சட்டவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் யாவையென்பதையும்;

(v) ஐந்து புள்ளிகளையாவது வழங்குவதற்கு நேர்முகப் பரீட்சை சபைக்கிருந்த வாய்ப்பினை இழக்கச் செய்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vi) கடமைக்கு ஏற்புடையதான விதத்தில் ஈட்டப்பட்டுள்ள வேறு உயர் கல்வித் தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4557/ '13

11.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிவாரணம் உண்மையான ஏழைகளுக்கு கிடைப்பதில்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டினை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) சமுர்த்தி பெறுநர் ஒருவருக்கு தற்போது மாதாந்தம் கிடைக்கும் பணத் தொகை வறுமை நிலையிலிருந்து மீள்வதற்குப் போதுமானதாக இல்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4628/'13

12.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்பொது வாழ்க்கைச் செலவுப்படி எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) வாழ்க்கைச் செலவுப்படியின் அலகுப் பெறுமதி (அலகொன்றின் பெறுமதி ரூபாய்களில்) எவ்வாறு கணக்கிடப்படுகின்றது என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட விடயம் (அலகுப் பெறுமதி) இறுதியாக வர்த்தமானி மூலம் எப்போது வெளியிடப்பட்டது என்பதையும்;

(iv) இறுதியாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்குப் பின்னர், குறிப்பிட்ட அலகுப் பெறுமதியைத் திருத்தியமைக்க ஏதேனும் காரணங்கள் இருந்தனவா என்பதையும் மற்றும்

(v) அவ்வாறாயின், புதிய வாழ்க்கைச் செலவுப்படி அலகுப் பெறுமதியை அறிமுகம் செய்வதற்கு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான அறிவுறுத்தல்கள் எப்போது வழங்கப்படும் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4739/ '14

13.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் காணப்படும் ஒட்டுமொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அரசாங்கத்தினால் மின் கட்டணப் பட்டியல் செலுத்தப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அனைத்து பாடசாலைகளினதும் மின் கட்டணப் பட்டியல்களை அரசாங்கத்தின் மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2506/ '12

14\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வள மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3234/12

15\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை வங்கி தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் தொழில் புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களை கொண்டுள்ளதா அல்லது குறைவான ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஒரு ஊழியருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுங்கால நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1\.

தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தம்),— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2\.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 8 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.23 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2012ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.23

2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சருமான சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலஞ்சம் சுற்றிவளைப்பின் போது இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு எடுக்கும் முற்பணக் கணக்கு - இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை இக் கட்டளை மூலம் மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 7,000,000 இலிருந்து ரூபா. 12,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 12,000,000 இலிருந்து ரூபா. 20,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2013.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / (கலாநிதி) சரத் அமுனுகம,*
சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும்
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரும்.

2014.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.24 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.24

2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சருமான சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரச்சாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனைக்கான (வெளியீட்டு உரிமையை பகிரங்கப்படுத்தல், மொழிபெயர்ப்பு உரிமையைக் கொள்வனவு செய்தல், மொழிபெயர்ப்புக் கட்டணம் மற்றும் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட) முற்பணம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை இக் கட்டளை மூலம் மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 2,500,000,000 இலிருந்து ரூபா. 2,350,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா. 1,000,000,000 இலிருந்து ரூபா. 1,950,000,000 வரை

(இக்கட்டளை 2013.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / (கலாநிதி) சரத் அமுனுகம,*
சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும்
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரும்.

2014.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.25 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.25

2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சருமான சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "முடிக்கப்பட்ட வேலை முற்பணக் கணக்கு - அரச தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 450,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2013.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் /(கலாநிதி) சரத் அமுனுகம,*
சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும்
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரும்.

2014.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.26 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.26

2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சருமான சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "விவசாயப் பண்ணைகளின் பராமரிப்பு மற்றும் விதைகள் விற்பனை முற்பணக் கணக்கு - விவசாயத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 330,000,000 இலிருந்து ரூபா. 416,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 330,000,000 இலிருந்து ரூபா. 416,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2013.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / (கலாநிதி) சரத் அமுனுகம,*
சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும்
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரும்.

2014.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.27

2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சருமான சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரத களஞ்சிய முற்பணக் கணக்கு - இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 1,450,000,000 இலிருந்து ரூபா. 1,700,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா. 800,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை.

(இக்கட்டளை 2013.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / (கலாநிதி) சரத் அமுனுகம,*
சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும்
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரும்.

2014.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.28 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.28

2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சருமான சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை முற்பணக் கணக்கு - அரச தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 200,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா. 20,000,000 இலிருந்து ரூபா. 92,000,000 வரை

(இக்கட்டளை 2013.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / (கலாநிதி) சரத் அமுனுகம,*
சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும்
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரும்.

2014.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.7),— 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளை 2013.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

## அட்டவணை

### 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2013 தொடர்பில், 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள். நிரல் II (ரூபா) | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் நிரல் III (ரூபா) | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் நிரல் III (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | அரசாங்க முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சு | 17301 | 2,500,000 | 2,555,000 | - | - | - | - | 1 |
| 2. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 58,000,000 | 54,000,000 | - | - | 2 |
| 3. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | - | - | 46,000,000 | 40,000,000 | | | 3 |
| 4. | மாவட்டச் செயலகம், குருநாகல் | 27201 | - | - | 75,000,000 | 69,000,000 | - | - | 4 |
| 5. | மாவட்டச் செயலகம், அனுராதபுரம் | 27401 | - | - | 42,000,000 | 39,000,000 | - | - | 5 |
| 6. | மாவட்டச் செயலகம், பொலன்னறுவை | 27501 | - | - | 20,000,000 | 17,000,000 | | | 6 |
| 7. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 37,000,000 | 32,000,000 | | | 7 |
| 8. | பொலிஸ் திணைக்களம் | 22501 | - | - | 1,250,000,000 | 1,200,000,000 | - | - | 8 |
| 9. | வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு | 18101 | - | - | - | - | 10,000,000 | 17,500,000 | 9 |
| 10. | நில அளவையாளர் நாயகத் திணைக்களம் | 28801 | - | - | 100,000,000 | 97,000,000 | - | - | 10 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11. | பதிவாளர் நாயகத் திணைக்களம் | 25401 | - | - | - | - | 22,000,000 | 200,000,000 | 11 |
| 12. | இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 29301 | - | - | 11,000,000 | 10,200,000 | - | - | 12 |
| 13. | சுகாதார அமைச்சு | 11101 | - | - | 900,000,000 | 662,000,000 | - | - | 13 |
| 14. | வெகுசன ஊடக, தகவல் அமைச்சு | 12201 | - | - | 3,700,000 | 3,300,000 | - | - | 14 |
| 15. | வனவிலங்கு வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 17901 | - | - | 4,000,000 | 2,200,000 | - | - | 15 |
| 16. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | - | - | 52,000,000 | 49,500,000 | - | - | 16 |
| 17. | பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு | 10301 | 285,000,000 | 200,000,000 | 120,000,000 | 110,000,000 | 650,000,000 | 500,000,000 | 17 |
| 18. | இலங்கைத் தரைப்படை | 22201 | - | - | 1,750,000,000 | 1,600,000,000 | - | - | 18 |
| 19. | இலங்கை வான் படை | 22401 | - | - | 415,000,000 | 370,000,000 | - | - | 19 |
| 20. | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 32001 | - | - | 160,000,000 | 154,000,000 | - | - | 20 |
| 21. | கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 28101 | - | - | 140,000,000 | 139,000,000 | - | - | 21 |
| 22. | மலையக கிராமிய சமுதாய புனரமைப்புத் திணைக்களம் | 30501 | - | - | 1,000,000 | 900,000 | - | - | 22 |
| | **மொத்தம்** | | **287,500,000** | **202,555,000** | **5,184,700,000** | **4,648,600,000** | **682,000,000** | **717,500,000** | |

2014 ஏப்பிறல் 25 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம் / மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 8),— 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.29 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.29

2012ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சருமான சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 24702 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவினங்கள் - இலங்கை சுங்கத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 4,000,000 இலிருந்து ரூபா. 8,500,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 15,000,000 இலிருந்து ரூபா. 19,200,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2013.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் / (கலாநிதி) சரத் அமுனுகம,*
சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சரும்
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரும்.

2014.05.20 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

10.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்

கௌரவ சீ.ஏ. சூரியாரச்சி

கௌரவ(திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ ஹுனைஸ் பாரூக்

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ வை.ஜீ. பத்மசிறி

கௌரவ சாந்த பண்டார

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஆர். துமிந்த சில்வா

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ உதித் லொக்குபண்டார

கௌரவ ரோஹன திசாநாயக்க

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாஸ

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ திளும் அமுணுகம

கௌரவ விஜித பேருகொட

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா

கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ ஜானக பண்டார

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ வி.கே. இந்திக

கௌரவ நெரன்ஜன் விக்கிரமசிங்க

கௌரவ பெருமாள் ராஜதுரை

கௌரவ லலித் திசாநாயக்க

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்

கௌரவ ஏ.பி. ஜகத் புஷ்பகுமார

கௌரவ ஹேமால் குணசேகர

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ விஜய தஹநாயக்க

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ (கலாநிதி) மேர்வின் சில்வா

கௌரவ லக்ஷமன் செனவிரத்ன

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ குணரத்ன வீரகோன்

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ

கௌரவ அதாவுத செனெவிரத்ன

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க

கௌரவ ஜே. ஆர். பி. சூரியப்பெரும

கௌரவ திஸ்ஸ கரல்லியத்தே

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க

கௌரவ பீலிக்ஸ் பெரேரா

கௌரவ விநாயகமூரத்தி முரளிதரன்

கௌரவ நியோமால் பெரேரா

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன

கௌரவ எச்.ஆர். மித்ரபால

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ (திருமதி) பவித்ரா தேவி வன்னிஆரச்சி

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேகா

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா

கௌரவ சனீ ரோஹன கொடிதுவக்கு

கௌரவ விக்டர் அந்தனீ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார

கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ தயாசிறித திசேரா

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ சனத் ஜயசூரிய

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ தினேஷ் குணவர்தன,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பை மீறிச் செயல்பட்டுள்ளமை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற தெரி குழு,—

இவ்வுயர் சபையின் பாராளுமன்ற உறுப்பனரான கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் 2010 நவெம்பர் மாதம் 29 ஆம் திகதியும் அதற்கு முந்திய நாட்களிலும் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்களினால் இலண்டன் நகரில் இலங்கை அரசு மற்றும் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட கூட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலந்துரையாலடல்களில் நேரடியாக அத்துடன் / அல்லது மறைமுகமாக கலந்து கொண்டுள்ளதாகவும், அவ்வாறான கலந்துரையாடல்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அத்துடன் அல்லது பக்க பலமூட்டியும் அனுசரணை வழங்கியுமுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாலும்,

குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வதுடன் தொடர்புபட்ட அடிப்படை கலந்துரையாடல்கள் மற்றும் ஆர்வமூட்டும் கூட்டங்களுக்கும் அதனுடன் தொடர்புபட்ட அறிவூட்டல் நிகழ்வுகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் நேரடியாக கலந்து கொண்டுள்ளதாக அறியவந்துள்ளதாலும்,

இதற்கு முன்னரும் பராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துடனும் அதன் ஆதரவாளர்களுடனும் பல்வேறு வகையில் தொடர்புகளை கொண்டிருந்ததாக தகவல்கள் வெளியாகி இருப்பதனாலும்,

இலண்டன் மற்றும் ஐரோப்பாவின் ஏனைய பிரதான நகரங்களைச் சேர்ந்த எல்.ரீ.ரீ.ஈ. செயற்பாட்டாளர்களுடன் மற்றும் அல்லது எல்.ரீ.ரீ.ஈ. ஆதரவாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் பேணி வந்துள்ளதாகவும், பேணி வருவதாகவும் தகவல்கள் வெளியாகி இருப்பதாலும்,

மேற்சொன்ன செயற்பாடுகளில் ஒன்றின் மூலமாகவோ அல்லது பலவற்றின் மூலமாகவோ பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள் இலங்கை அரசியலமைப்பின் 157 (அ) பிரிவையும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் மற்றும் சத்தியப் பிரமாணத்தையும் தெளிவாகவே மீறியுள்ளதாகத் தெரிவதனாலும்,

மேற்சொன்ன விடயங்கள் தொடர்பாக மற்றும் மேற்சொன்ன விடயங்களுக்கு ஏற்புடையதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்களின் செயற்பாடு தொடர்பாக ஆராய்ந்து இவ்வுயரிய சபைக்கு அறிக்கையிடுவதற்காக பாராளுமன்ற தெரி குழுவொன்றை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

2. மேலும்,

(அ) மேற்படி குழுவிற்கு அங்கத்தவர்களை பெயர்குறித்து நியமித்தலும் தவிசாளரை நியமித்தலும் கௌரவ சபாநாயகர் அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்,

(ஆ) மேற்படி குழு தனது கூட்ட, நடப்பெண்ணை தீர்மானிப்பதற்கும்,

(இ) தேவையான ஆட்களை அழைக்கவும் தேவையான பத்திரங்களை தருவிப்பதற்கும்,

(ஈ) உறுதிமொழி அளித்த நிலையில் சாட்சியாளர்களை விசாரிக்கவும் குழு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

3. காலத்துக்குக் காலம் அறிக்கையிடுவதற்கும், பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்ட போதிலும் கூட்டங்களை நடாத்திச் செல்லவும் மேற்படி குழு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

பா. 107/ '10

11.

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ ஹரீன் பர்னாந்து,— இங்கிலாந்தின் "ஹீத்ரோ" விமான நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் இந்த கௌரவ சபையின் எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்புபட்டிருந்தாரா என்பதை விசாரித்து அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

2010 திசெம்பர் மாதம் 02 ஆம் திகதி நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரும், அரசாங்க கட்சியின் முதற்கோலாசானுமான கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள் பாரளுமன்றத்தின் முன்னிலையில்;

“இந்த பாராளுமன்றத்தின் அரசியலமைப்பின் பிரகாரம் சத்தியப் பிரமாணம் செய்த உறுப்பினர் ஒருவர் தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்போடு சட்டவிரோத குழுக்களுடன் இணைந்து அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் வருகை தரும் நேரத்தில் இங்கிலாந்திலுள்ள விமான நிலையமொன்றுக்குச் சென்று எமது நாட்டுக்கும், அதேபோன்று தமது சத்தியப் பிரமாணத்திற்கும் எதிராக செயற்பட்டிருப்பின், அந்த உறுப்பினரை இச்சபை உடனடியாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்” என அறிவித்திருப்பதாலும்;

கௌரவ தினேஷ் குணவர்தன அமைச்சரால் எழுப்பப்பட்ட விடயங்கள் இச்சபையின் கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதனாலும்;

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம்;

(அ) அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பின்னணிக்கு காரணியான விடயங்களையும்;

(ஆ) இங்கிலாந்தின் “ஹீத்ரோ” விமான நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் இந்த கௌரவ சபையின் எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்புபட்டிருந்தாரா என்பதை விசாரித்து அறிக்கையிடுவதற்காக பாராளுமன்ற தெரிவுழுவொன்றை நியமிக்குமாறு பிரேரிக்கின்றோம்.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அக்குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அதன் அறிக்கையை அதன் முதலாவது கூட்டத்தில் இருந்து மூன்று மாத (03) காலப்பகுதிக்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படுகின்ற அத்தகைய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்குச் சமப்பித்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(ஆ) குழுவின் முன் தோற்றுமாறு எவரையும் கட்டளையிட்டழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைச் சமாப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடவும், மேலுள்ள விடயத்தைப் பூரணமாக ஆராய்வதற்குத் தேவையானதெனக் கருதும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய்மொழியிலான அனைத்துச் சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளவும் பொறுப்பேற்கவும் அதிகாரமுடையதாகவிருத்தல் வேண்டும்.

(இ) குழுவுக்குத் துணைபுரியவென உரிய துறைகளில் சிறப்புத் தகுதிகள் உடையோர் மற்றும் நிபுணர்கள் ஆகியோரின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

12.

இலங்கை பரிசோதனை ஆய்வுகூடங்களின் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

சுசந்த புஞ்சி நிலமே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

ஜயவிக்கிரம மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

வெலன்ஹின்ன வாசிஸ்ஸர சர்வதேச கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

பியசேன கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

அலவி மௌலானா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

ஸெய்யித் அப்துர் ரஹ்மான் ஜிப்ரி மௌலானா ஞாபகார்த்த அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

லக்ஷ்மன் வசந்த பெரேரா சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 23.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 24.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 26.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 27.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 28.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

30.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

35.

மொஹான் லால் கிரேரு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

36.

விக்டர் அந்தனீ கல்வி, சமூக, பொருளாதார சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.